# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.4/2022

DW3–ராஜு நாள்.20.01.2026

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் விவசாயம் செய்கிறேன். வீட்டுமனை வாங்கி விற்பதில் எனக்கு அனுபவம் கிடையாது. என்மருமகள் பெயரில் வாங்கிய சொத்துவிற்பனைக்கு வருகிறது என்று யார் தகவல் சொன்னார்கள் என்றால் புரோக்கர்கள் சொன்னார்கள். அந்த புரோக்கர்கள் பெயர் நாரயணசாமி என்று ஒருவர், மற்றொருவர் அருணாச்சலம் என்று நினைக்கிறேன். 7,8 வருடங்கள் ஆகிவிட்டது. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் 3ம்நபர் சொல்லி விவரம் தெரியுமென்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 3ம்நபர் என்று நானாக ஜோடித்து கொண்டேன் என்றால் சரியல்ல. பெரம்பலூரில் சொத்து வாங்கியது என்மகனின் வருமானத்தை வைத்து என்றால் சரிதான். இடம் வாங்குவது சம்மந்தமாக அவர் தான் முடிவு செய்வார் என்றால், அவர் இங்கு இல்லை நான் தான் பார்ப்பேன். தாவா சொத்தை வாங்குவதற்கு நானும், என்மகனும் தான் சென்றோம். விலைபேசியது நான் தான். பத்திரம் எழுதும்போது என்மகன் இந்தியாவில் இல்லை. என்மருமகள் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தை பார்த்துள்ளேன். நான் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. உண்மையில் நான் கூறுவதுபோன்று கிரயம் வாங்கியிருந்தால் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டிருப்பேன் என்றால் சரியல்ல. என்மருமகள் பெயரில் சும்மா பத்திரம் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிரயம் பேச போகும்போது நான், ராஜுவின் மருமகன், சீத்தாலட்சுமி கணவர், சுபாராணி கணவர், செல்லம் மற்றும் புரோக்கர்கள் இருந்தோம். அப்போது ராஜு இருந்தார். 1ம் பிரதிவாதி சொத்துக்களை விற்று அவர் மகள் பெயரில் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சொத்தை யார் கிரயம் வாங்கினார்கள் என்று விசாரித்தேன். என்மருகளுக்கு கிரயம் கொடுத்தவர்களுக்கு அந்த சொத்தை கிரயம் வாங்குவதற்கு வருமானம் கிடையாது என்றும், அவர் அப்பாதான் மகள் பெயரில்

கிரையம் வாங்கி வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியாது, மருமகளுக்கு தான் தெரியும். ஏன் நோட்டீஸ் அனுப்புனீர்கள் என்று நான் கேட்டு செல்லவில்லை. எனக்கு கிரயம் பத்திரம் எழுதப்பட்டது பற்றி எந்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல. என்மருமகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் என்மருமகள் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றும், அதில் உள்ளவிவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.